தமிழ்நாடு அரசு

# சிறுபான்மையினர் நலத்துறை

807. 5வது தளம் அண்ணாசாலை, சென்னை – 2 தொலை பேசி எண். 044–28523544

இ.மெயில் . tnminoritieswelfare@yahoo.com

## சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை வழங்குதல் 2015–16

## (Pre-matric Scholarship)

தமிழ் நாட்டில் அரசு, அரசு உதவிப்பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மைய அரசால் அறிவிக்கப்பட்ட சிறுபான்மையினரான இஸ்லாமியர், கிருத்துவர், சீக்கியர் புத்தமதத்தினர் பார்சி மற்றும் ஜெயின் மதத்தை சார்ந்த மாணவ/ மாணவியர்களுக்கு 2015–16 ஆம் ஆண்டிற்கு பள்ளிபடிப்பு கல்வி உதவித்தொகை (புதுப்பித்தல் மற்றும் புதியது) பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### உதவித்தொகை பெற தகுதி மற்றும் நிபந்தனைகள்

- முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்
- பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / ஆதி–திராவிடர் நலத்துறை / மற்றும் இதர துறைகள், நலவாரியங்கள் மூலம் கல்வி உதவித்தொகை பெறுதல் கூடாது.
- குடும்பத்தில் அதிக பட்சம் இருவருக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பத்திலுள்ள மாணவ / மாணவியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**இத்திட்டத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான படிப்புகளுக்கு மாணவ / மாணவியர்கள் offline மூலமாகவும் ஒன்பது மற்றும் பத்தான் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் Online மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.** பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தில் 2015–16ஆம் ஆண்டில் விண்ணப்பம் செய்வதற்கான கால அட்டவணை

### 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை Offline மூலம் விண்ணப்பித்தல்

| | |
|---|---|
| உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாணவ / மாணவியர் கல்வி நிலையங்களிலேயே சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | **15.07.2015** |
| கல்வி நிறுவனங்கள் மாணவ / மாணவியரிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களை உரிய படிவத்தில் கேட்புப்பட்டியலை தயார் செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | **25.07.2015** |
| மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கேட்புப்பட்டியல்களை தொகுத்து ஆணையர் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டிய கடைசி நாள் | **05.08.2015** |

9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ / மாணவியர் online மூலம் **www.scholarships.gov.in** என்ற இணையதள முகவரியில் STUDENT LOGIN என்பதை தெரிவு செய்து Register என்பதை கிளிக் செய்து விண்ணப்பத்தில் கோரிய விவரங்களை பூர்த்தி செய்து SAVE செய்தால் ஒரு தற்காலிக ID (Temporary ID) கிடைக்கும். மேலும் விவரங்களை பூர்த்தி செய்ய இந்த தற்காலிக ஐடி மற்றும் பிறந்த தேதி விவரத்தை அளிக்க வேண்டும். அவை சரியாக இருந்தால் மேலும் கூடுதல் விவரங்களான படிப்பு, முகவரி, வங்கி விவரம் ஆகியவற்றை கோரும். இவை அனைத்தையும் அளிப்பதோடு இணைப்புகளை ஸ்கேன் (SCAN) செய்து அப்லோடு (upload) செய்ய வேண்டும். மாணவரது புகைப்படம், முந்தைய ஆண்டின் மதிப்பெண் பட்டியல் அல்லது சான்றிதழ், பெற்றோர் / பாதுகாவலரின் வருமான சான்றிதழ், மதத்திற்கான சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வங்கி பாஸ் புக் நகல் ஆகியவற்றை ஸ்கேன் செய்து அப்லோட் செய்ய வேண்டும். இவை அனைத்தும் முழுமையாக முடிந்த பிறகு " Confirm and Submit Application" என்பதை கிளிக் செய்ய வேண்டும். இவ்வாறு முழுமையாக முடிவடைந்த விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து அதனுடன் இணைப்புகளை இணைத்து கீழ்கண்ட காலக்கெடுவிற்குள் கல்வி நிலையத்தில் மாணவர்கள் விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும்.

### 9 மற்றும் 10 ஆம் வகுப்பு Online மூலம் விண்ணப்பித்தல்

| | |
|---|---|
| மாணவ / மாணவியர் **Online** மூலம் **(www.scholarships.gov.in)** உதவித்தொகைக்கு விண்ணப்பித்து, Online விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து, அதனுடன் உரிய இணைப்புகளை இணைத்து பயிலும் கல்வி நிறுவனத்தில் சமர்ப்பித்தல்<br>மற்றும்<br>கல்வி நிறுவனங்கள் மாணவ / மாணவியர் சமர்பிக்கும் Online விண்ணப்பங்களை இணைப்புகளுடன் சரிபார்த்து ஃபார்வேர்ட் (Forward) செய்ய வேண்டிய கடைசி நாள் | **31.07.2015** |

### பொதுவான விவரங்கள்

மாணவ, மாணவியர்கள் விண்ணப்பங்களை தாங்கள் பயிலும் கல்வி நிலையத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். நேரடியாக சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –2 க்கு அனுப்பி வைக்கப்படும் கல்வி உதவித் தொகை விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாணவ, மாணவியர்களின் வங்கிக்கணக்கு விவரங்கள் கண்டிப்பாக கல்வி உதவித்தொகை கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். இவ்விவரங்கள் இன்றி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

1 முதல் 8–ஆம் வகுப்பு மாணவ / மாணவியர் புதியது (Fresh), மற்றும் புதுப்பித்தல் (Renewel) ஆகிய கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பிப்பவர்கள் அதற்குண்டான உரிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். (புதியது மற்றும் புதுப்பித்தலுக்கு தனித்தனி விண்ணப்ப படிவங்கள் இணையதளத்தில் உள்ளது).

9 மற்றும் 10–ம் வகுப்பு மாணவ / மாணவியர் ஆன்லைனில் புதுப்பித்தல் (Renewel) விண்ணப்பிக்கும்போது முதன் முறையாக ஆன்லைன் செயல்படுத்தப்படுவதால் புதியது (Fresh) என்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### கல்வி நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:–

மாணவ/ மாணவியரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவங்களை பள்ளி தலைமையாசியர் சரிபார்த்து மாணவ/ மாணவியரின் பெயர், பிறந்ததேதி, மதம், பெற்றோர் / பாதுகாவலர் பெயர், ஆண்டு வருமானம், பள்ளியால் நிர்ணயிக்கப்பட்டபடி வருகை (Attendance). நிரந்தர முகவரி. பின்கோடு எண், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். மற்றும் பள்ளியின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை சரிபார்க்க வேண்டும். மேலும் மாணவ/மாணவியரால் முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் மொத்தம் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருப்பதை உறுதிசெய்து தகுதியுள்ள நபர்களை மட்டும் பரிந்துரை செய்ய வேண்டும். மாணவ / மாணவியரால் பள்ளியில் உண்மையில் செலுத்தப்பட்ட சேர்க்கைக்கட்டணம் கற்பிப்புக்கட்டணம். இதர பராமரிப்பு கட்டணம் போன்றவற்றை சரிபார்த்து ஊர்ஜிதப்படுத்த வேண்டும். மாணவ/மாணவியர் விடுதியில் தங்கிப்பயில்பவரா (அல்லது) விடுதியில் தங்காது பயில்பவரா என்பதை சரிபார்த்து உறுதிப்படுத்த வேண்டும். விடுதியில் தங்கி பயில்பவராக இருப்பின் விடுதியின் பெயர் மற்றும் முகவரி விவரம் கேட்புப் பட்டியலில் அளிக்கப்பட வேண்டும். மேலும் அதற்கான சான்றினை தலைமை ஆசிரியர் கேட்புப் பட்டியலுடன் தனியே அளிக்கப்பட வேண்டும். கல்வி உதவித்தொகைகள் வங்கிகளின் வாயிலாக மின்னனு பரிமாற்றம் (ECS) மூலம் மட்டுமே அனுப்பப்படும் என்பதால் மாணவ/மாணவியரின் வங்கி சேமிப்பு கணக்கு எண். (Core Banking Service Number) வங்கியின் பெயர். கிளையின் பெயர் மற்றும் முகவரி, IFS code (11 digits) போன்ற விவரங்கள் பெற்று சரிபார்த்து அதனை கேட்புப் பட்டியலில் குறிப்பிடப்பட வேண்டும்.

இவ்விவரங்கள் அனைத்தையும் தொகுத்து 1 முதல் 8–ம் வகுப்பு பயிலும் தகுதியான மாணவ/ மாணவியர்களின் பட்டியலை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து குறுந்தகட்டில் Excel format –ல் (12 point Arial font) பதிவு செய்து குறுந்தகடு மற்றும் தட்டச்சு செய்த புதிய மற்றும் புதுப்பித்தல் உதவித்தொகைக்கான கேட்புப் பட்டியலை தனித்தனியே 25.7.2015 –க்குள் தங்களது மாவட்ட எல்லைக்குட்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு சமர்ப்பித்து அதற்கான ஒப்புகைச் சான்று பெறவேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கல்வி உதவித் தொகை விண்ணப்பங்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சரிபார்த்தலுக்குப் பின் கல்வி நிலையத்தின் முழு பாதுகாப்பில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும் அவை தணிக்கையின் போது காண்பிக்கப்பட வேண்டும்.

9 மற்றும் 10–ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் ஆன்லைனில் விண்ணப்பம் செய்து கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை சரிபார்த்து ஆன்லைனில் பார்வேர்ட் செய்ய வேண்டும். தகுதியற்ற விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பற்றிய விவரங்களை **www.minorityaffairs.gov.in** என்கிற இணையதள முகவரியிலும் எளிமையாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் 1 முதல் 8 –ம் வகுப்புவரைக்கான கேட்புப் பட்டியல்கள் விண்ணப்பங்கள் ஆகியவற்றை **www.bcmbcmw.tn.gov.in** என்ற இணைய தள முகவரியிலும் படியிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.

### விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1. விண்ணப்ப படிவத்தில் மாணவ/மாணவியரின் பாஸ் போர்ட் அளவு புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்.
2. பணியிலிருக்கும் பெற்றோர்களாக / பாதுகாவலர்களாக இருந்தால் பணிபுரியும் இடத்திலிருந்து வருமான சான்றிதழ் பெற்று சமர்பிக்கலாம் . இதர இனங்களில் அரசின் (Revenue Department ) வருமானச் சான்றிதழ் (01.4.2014 முதல் 31.3.2015 வரையிலான காலத்திற்குரியது) சமர்பிக்க வேண்டும்.
3. இஸ்லாமியர்/ கிறிஸ்துவர்/புத்தமதத்தினர்/ சீக்கியர்/ பார்சி/ ஜெயின் ஆகிய சார்ந்துள்ள மதத்திற்கான ஏதாவது ஒரு சான்று வருவாய் துறையினரால் அளிக்கப்பட்ட வகுப்பு சான்று (அல்லது) மாற்று சான்றிதழ் (Transfer Certificate) அல்லது ரூ.10/– மதிப்புள்ள நீதிமன்ற சாரா முத்திரைத் தாளில் (Non Judicial stamp paper) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணையதள முகவரியில் உள்ள மாதிரி படிவத்தின் படி பூர்த்தி செய்து பெற்றோர்/பாதுகாவலரால் உறுதி ஆவணம் (Affidavit) கையொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டும்)
4. வங்கிக் கணக்கு எண் மற்றும் IFS Code விவரம் அடங்கிய வங்கிக் கணக்கு புத்தக நகல் அல்லது ரத்து செய்யப்பட்ட காசோலையின் நகல்.

செ.ம.தொ.இ/730/வரைகலை/2015

**ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை**